# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 202/மா/2023**

**நாள்: 5.09.2023**

திரு. S. மாணிக்கம்,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 02 (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, பொற்றாமரை நகர், பிளாட் எண்.93 வசிக்கும் திரு. S. மாணிக்கம் என்பவரின் 27.06.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 03.07.2023–ல் பெறப்பட்டு 202/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

மதுரை, புதுவிளாங்குடி, பொற்றாமரை நகர், பிளாட் எண்.93 வசிக்கும் திரு. S. மாணிக்கம் என்பவரின் 27.06.2023 நாளிட்ட தனது மனுவில் :

நான் ஓய்வுபெற்ற கடற்படை ராணுவ வீரர். எனது மனைவி திருமதி. வித்யபிரியா பெயரில் உள்ள பிளாட் எண்.93, செம்பருத்தி நகர் (பொற்றாமலை நகர்) விளாங்குடி, மதுரை – 18, வீட்டின் மதுரை மாநகராட்சி, மண்டலம்-2, வார்டு எண்.1, சொத்து வரி, பழைய எண்.:115/023/07626, கதவு எண்.115/001/904705-க்கான சொத்து வரி 2021-2022 II & 1064/- SUC 2021/2022 II 180, மொத்தம் ரூ.1244/-இணையதளம் online மூலமாக 06.04.2022-ல் பணம் செலுத்தினேன். Bank Reference Number : 209612381619 எனது வங்கி கணக்கிலிருந்து மேற்படி தொகை மாநகராட்சி கணக்கில் வரவாகி: Payment Success and Receipt generation in progress SMS Notification will be sent Shorty என்று தெரிவிக்கப்பட்டது.

ஆனால் மேற்படி தொகை எனது சொத்துவரி கேட்பில் இன்று வரை வரவாகவும் இல்லை. ரசீதும் Generate ஆகவில்லை. பணமும் திருப்பி அனுப்பப்படவில்லை. இது தொடர்பாக மதுரை மாநகராட்சி மண்டலம்-2, அலுவலகத்தில் உள்ள சம்மந்தப்பட்ட கணினி அலுவலரிடம் 15-க்கும் மேற்பட்ட முறை நேரில் சென்று முறையிட்டேன். அதற்கு இது தொடர்பாக சென்னை C.M.A. அலுவலகத்திற்கு E-Mail அனுப்பியுள்ளோம். அங்குதான் சரி செய்ய வேண்டும் என்று தெரிவித்தார்கள். நானும் சென்னை C.M.A. அலுவலகத்திற்கு 19.11.2022 தேதியில் E-Mail அனுப்பியுள்ளேன். நடவடிக்கையோ, பதிலோ இல்லை. இது தொடர்பாக முதல்வரின் முகவரி பிரிவிற்கு மனு செய்தும் இன்றுவரை நடவடிக்கை இல்லை. இது தொடர்பாக தகவல் பெறும் உரிமை சட்டப்படி தேதி 04.10.2022 அன்று online-ல் மனு செய்தும், தகவல் பெறாததால் முதல் மேல்முறையீடு அலுவலருக்கு தேதி : 10.11.2022 அன்று online-ல் மூலம் மனு செய்தும் இன்று வரை தகவல் பெறவில்லை. தொகையும் எனது வரிக்கு வரவு வைக்கப்படவில்லை.

இது தொடர்பாக மண்டலம்-2, குறைதீர்க்கும் முகாமில் 14.02.2023 மனு எண்.36, கொடுத்தும் எந்த பதிலும் இல்லை. அரசு துறைகள் அனைத்தும் கணினி மயமாக்கப்பட்டு E-Governance – முறை அமல்படுத்தப்பட்டு வரும் நிலையில் மதுரை மாநகராட்சியில் online- மூலம் வரித்தொகை ரசீது வழங்கப்படாதது மிகவும் கண்டிக்கத்தக்கது. 2021-2022 II-ம் அரையாண்டிற்கான வரியினை வரவு வைக்கப்படாமல் கேட்பாக (Demand) உள்ளதால் அதற்கு அடுத்த ஆண்டிற்கான வரியினை செலுத்த முடியாமல் உள்ளேன்.

எனவே நான் online மூலம் செலுத்திய தொகையினை 2021-2022 –II-ம் அரையாண்டிற்கு வரவு வைத்து உரிய ரசீது வழங்க உரிய உத்தரவு வழங்க வேண்டுமாயும், அல்லது எனது தொகையினை 18% வட்டியுடன் திரும்ப செலுத்தவும், எனது மன உளைச்சலுக்கும், எனது பணியினை விட்டு விட்டு பலமுறை அலுவலகத்திற்கு அலைந்ததால், எனக்கு உரிய நஷ்ட ஈடு வழங்க வேண்டுகிறேன். நான் 2022-2023 ஆண்டிற்கான சொத்து வரியை செலுத்த முடியவில்லை. இதனால் சொத்து வரி உரிய காலத்தில் செலுத்தினால் கிடைக்க வேண்டிய 5% ஊக்கத்தொகை கிடைக்காமலும், நிர்வாகத்தினால் என்னால் வரி செலுத்த முடியாததற்கு அபராதம் செலுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது.

எனவே நான் செலுத்திய தொகையினை எனது வரி பாக்கிக்கு வரவு வைக்கவும், எனக்கு ஊக்க தொகை வழங்கவும், அபராதம் தள்ளுபடி செய்யவும், மேலும் எனது அலைச்சல் மன உளைச்சலுக்கு தகுந்த நஷ்ட ஈடு வழங்கவும், உத்தரவிட பணிவுடன் வேண்டுகிறேன்.

**இம்முறைமன்ற கடித நாள் 24.7.2023 வாயிலாக மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி ஆணையாளர் தன்னுடைய 17.8.2023 நாளிட்ட அறிக்கையில் :**

"மதுரை மாநகராட்சி மண்டலம்-2, (வடக்கு) வார்டு- 1 பிளாட் எண்.93, செம்பருத்தி நகர் சொத்து வரி விதிப்பு எண்.115/001/904705-க்கு சொத்து வரி 2021-2022/II அரையாண்டுக்கான சொத்து வரி தொகை ரூ.1,244/-யை 06.04.2022-ல் online மூலம் செலுத்தியதற்கு, சொத்து வரி ரசீது வழங்க கோரப்பட்டுள்ளதற்கு, மனுதாரர் online மூலம் செலுத்தியத் தொகை, ஆணையாளர், மதுரை மாநகராட்சி வருவாய் நிதி வங்கி தலைப்பு கணக்கில் செலுத்திய சொத்து வரித்தொகை Pass Sheet-ல் வரவு இல்லை. மனுதாரர் செலுத்திய தொகை ரூ.1,244/-யை மதுரை மாநகராட்சி வருவாய் நிதி வங்கி தலைப்பு

கணக்கில் Commissionerate of Municipal Administration Bill Desk cmab.billdesk@hdfcbank பதிவில் உள்ளதா என்பது குறித்து, நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டுள்ளது" எனத் தெரிவித்துள்ளார். நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அலுவலகத்திலிருந்து விவரங்கள் பெறப்பட்டவுடன் அடுத்த வரும் நிதியாண்டு சொத்துவரி கேட்பில் தொகையை சரிகட்டப்படும் என்று தெரிவித்துள்ளார்."

**முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெறும் விசாரணையில் ஆஜராகுமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.08.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாவட்டம் மண்டலம் 2 வார்டு 1 விளாங்குடி பொற்றாமரை நகர் பிளாட் எண் 93 ல் உள்ள எங்களுக்கு சொந்தமான வீட்டிற்கான சொத்து வரி எனது வங்கி கணக்கிலிருந்து இணையதளம் வழியாக மாநகராட்சிக்கு செலுத்தப்பட்டது. மேற்கண்ட தொகை மாநகராட்சி கணக்கில் வரவாக்கப்பட்டு குறுஞ்செய்தி (SMS) விரைவில் அனுப்பப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் நான் செலுத்திய தொகையை எனது சொத்துவரி கேட்பில் இன்றுவரை வரவாக்கப்படவில்லை. அதற்கான ரசீதும் Generate ஆகவில்லை, இது குறித்து மாநகராட்சி அலுவலர்களிடம் கோரியபோது கணிப்பொறி கோளாறின் காரணமாக மேற்கண்ட தவறு நடந்துள்ளதாகத் தெரிவித்து மாநகராட்சிக்கு செலுத்தப்பட்ட வரி தொகை விரைவில் எனது சொத்து வரி கணக்கில் சேர்க்கப்படும் என தெரிவித்தனர்.

எனவே என்னால் இணையதளம் வழியாக செலுத்திய தொகையை 2021–22 இரண்டாம் அரையாண்டிற்கு வரவு வைத்து உரிய ரசீது வழங்கிடவும், என்னால் வழங்கப்பட்ட தொகைக்கு 5 சதவீத வட்டித்தொகையை மாநகராட்சியால் வழங்கிடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**மதுரை மாநகராட்சி மண்டலம் 2ன் உதவி வருவாய் அலுவலர் 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

"மதுரை மாநகராட்சி மண்டலம்–2 (வடக்கு) வார்டு 1 பிளாட் எண். 93, செம்பருத்தி நகர் சொத்து வரி விதிப்பு எண்.115/001/904705–க்கு சொத்து வரி 2021–2022/II அரையாண்டுக்கான சொத்துவரி தொகை ரூ.1,244/–யை 06.04.2022–ல் Online மூலம் செலுத்தியதற்கு, சொத்துவரி ரசீது வழங்க கோரப்பட்டுள்ளதற்கு, மனுதாரர் Online மூலம் செலுத்தியத் தொகை, ஆணையாளர், மதுரை மாநகராட்சி வருவாய் நிதி வங்கி தலைப்பு கணக்கில் செலுத்திய சொத்து வரித்தொகை Pass Sheet-ல் வரவு இல்லை. மனுதாரர் செலுத்திய தொகை ரூ.1,244/– யை மதுரை மாநகராட்சி வருவாய் நிதி வங்கி தலைப்பு கணக்கில் Commissionerate of Municipal Administration Bill Desk cmab.billdesk@hdfcbank பதிவில் உள்ளதா என்பது குறித்து, நகராட்சி நிர்வாக இயக்குநரக அலுவலகத்திற்கு மின்னஞ்சல் மூலம்

அனுப்பப்பட்டுள்ளது என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மனுதாரர் தான் செலுத்திய தொகைக்கு 5% தொகை வழங்குமாறு கோரியுள்ளார். மேற்கண்ட 5% தொகை ஏப்ரல் 2023 லிருந்து வழங்கப்படும் என்பதையும் இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் அறிக்கை, மதுரை மாநகராட்சியின் உதவி வருவாய் அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன, பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரியவருகிறது.**

மனுதாரர், மதுரை மாநகராட்சி மண்டலம்-2, வார்டு எண்.1 செம்பருத்தி நகர், மதுரை -18ல் தனது மனைவி பெயரில் உள்ள பிளாட் எண்.93ற்கு சொத்து வரி 2021-22 II - ரூ.1064/-மும் SUC 2021-22 II ரூ.180/-மும் ஆகமொத்தம் ரூ.1244/-ஐ இணையதளம் மூலமாக 06.4.22ல் செலுத்தி, அதற்கான இணையதள ஆதாரங்களை மதுரை மாநகராட்சி மண்டலம்-2ற்கு அனுப்பிய பின்னரும், அத்தொகையை மாநகராட்சி சொத்து வரி கணக்கில் வரவு வைக்கவில்லை என மனு அளித்த நிலையில், அதற்கு காரணம் Pass Sheetல் வரவு இல்லையென்று தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு cmab.billdesk@hdfcbank-ல் பதிவாகி உள்ளதா என்பது குறித்து மின்னஞ்சல் அனுப்பப்பட்டதாக மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். மனுதாரரும் சுமார் 15 முறை மதுரை மாநகராட்சி மண்டலத்திற்கு நினைவூட்டியும், நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு 19.11.2022 அன்று மின்னஞ்சல் அனுப்பியும் அன்னாருக்கு தீர்வு ஏற்படவில்லை என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது ஆகும். மனுதாரர் 6.4.2022ல் சொத்துவரி இணையதளத்தில் செலுத்தியும், மனுதாரரின் மனு மீது 21.8.2023 அன்று இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்தரவிட்ட பின்னர் மனுதாரரின் கோரிக்கைக்கு மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் அலுவலகத்தால் தீர்வு காணப்படாதது, அவ்வலுவலர்கள் எவ்வளவு மெத்தனமாகவும், அலட்சியமாகவும் பணிபுரிகிறார்கள் என்பதை காட்டுகிறது என்று இம்முறைமன்ற மன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

**The Tamil Nadu Urban Local Bodies Rules 2023**

**265. Preparation of assessment books :-**

(1) The Commissioner shall enter the annual value of all lands, buildings, telecommunication towers and storage structures determined by him and the tax payable thereon in the computerized assessment books (or demand register) maintained for this purpose at the Municipal office.

(2) Such books shall record the following particulars, insofar as they can be ascertained with regard to each assessable item and shall be revised from time to time as and when the property tax records modified due to change in particulars.

(a) the name of the owner and his contact number

(b) the name of the occupier and the contact number

(c) the name of the administrative zone, ward and street, if any, in which it, is situated, any survey number with the village name which it, bears:

(d) year in which the assessable item was originally assessed and last assessed.

(e) a description of the assessable item like plinth area of the building and of each storey (in.sq.ft.); the number of storeys in the building; area or extent of land (in.sq.ft.);

(f) the annual value or capital value of the assessable item, as the case may be;

(g) the amount of haly-yearly tax payable.

(h) usage of the assessable item. I.e., residential, non-residential industrial, educational or mixed use purpose, telecom, towers, storage structures, etc; or

(i) the amount received as rent or lease amount per year, if applicable.

(3) The assessment books shall be completely revised in case of general revision by the Commissioner once in every five years or earlier as per the guidelines issued by the Director or the Government.

Provided that nothing in this rule shall prevent the Commissioner from making routine changes in the assessment books as per provisions of the Act and these Rules:

Provided further that, in case, general revision is not undertaken whenever it is due for any reason whatsoever, the Commissioner may undertake a resurvey or reassessment of all or any of the properties in the municipality at the existing basic zonal values and tax rates.

(4) The Commissioner may, at any time, serve a notice on the owner or occupier of each land, building or storage structure as the case may be and in case of telecommunication tower, on the owner of the land or building on which such tower is erected, within the municipal limit and such owner or occupier may within fifteen days of receipt of such notice raise objections, if any, regarding the assessment with the Commissioner.

(5) The Commissioner shall dispose of such objections within thirty days of its receipt and pass written orders thereof, and the owner or occupier in case of land, building or storage structure and in case of telecommunication tower, the owner of the land or building on which such tower is erected, shall be required to pay the amount fixed on revision within fifteen days of the date of receipt of such order, or if the amount is not yet due, within fifteen days from the date on which it becomes due.

(6) (a) The owner or occupier as the case may be, shall be provided with a property tax book or card, either in physical or digital form, which shall contain all details relating to the assessable item and the amount of property tax payable.

(b) The property tax book or card shall be valid until the assessment is revised during a general revision or earlier, as directed by the Government in this behalf.

மேற்கண்ட விதிகளை பற்றிய புரிந்துணர்வு மதுரை மாநகராட்சி மண்டலம்-2 அலுவலர்களுக்கு இல்லை என்று இம்முறைமன்றம் கருதுகிறது.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில் குறிப்பாக

பிரிவு 7 The Ombudsman shall perform all or any of the following functions, namely-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) Pass an order on the proved allegation in the following manner, namely-

(a) xxxx

(b) xxxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules

பிரிவு12(1) The ombudsman may consider and dispose of complaints other than those involving criminal offences, in the following manager, namely-

(a) x x x x

(b) x x x x

(c) refer the complaint to the appropriate authority to take disciplinary action for wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body.

(d) x x x x

(e) x x x x

- ன்படி இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது.

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம்-2, வார்டு எண்.1 செம்பருத்தி நகர், மதுரை 18ல் தனது மனைவி பெயரில் உள்ள பிளாட் எண்.93ற்கு 2021-22 II Rs.1064மும் SUC 2021-22 II Rs. 180/- ஆகமொத்தம் ரூ.1244/-ஐ சொத்து வரியாக இணையதளம் மூலமாக 6.4.2022 அன்று செலுத்தியதற்கு மதுரை மாநகராட்சி மண்டலம்-2ன் அலுவலக கணக்கில் வரவு வைக்க கோரியும், மனுதாரர் தனது கோரிக்கை குறித்து மதுரை மாநகராட்சி மண்டலம் - 2ஐ 2023 ஆண்டு வரை அணுகியும், இம்முறைமன்றம் மனுதாரரின் மனு மீது 21.8.2023 அன்று விசாரணைக்கு உத்திரவிட்ட பின்பும், எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்த மதுரை மாநகராட்சி மண்டலம்- 2ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும் மனுதாரர் 2021-22 II ஆண்டிற்கான சொத்துவரி செலுத்த இயலாமல் போனதற்கு மதுரை

மாநகராட்சி மண்டலம் - 2ன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மனுதாரரின் மனு மீது உரிய நடவடிக்கை எடுத்து தீர்வு காணாததால், 2021-22 ஆண்டிற்கான சொத்துவரிக்கான ஊக்கத் தொகையை மனுதாரருக்கு வழங்க மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், இந்நேர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை இம்முறைமன்றத்திற்கு 45 நாட்களில் அனுப்பி வைக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. S. மாணிக்கம்,
   பிளாட் எண்.93,
   பொற்றாமரை நகர்,
   புதுவிளாங்குடி, மதுரை – 625 018.
2. ஆணையர்,
   மதுரை மாநகராட்சி,
   தல்லாக்குளம், மதுரை.
3. உதவி ஆணையாளர்,
   மண்டலம் 2 (வடக்கு)
   மதுரை மாநகராட்சி,
   மதுரை – 625 007.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
   நகர் நிர்வாக அலுவலக வளாகம்,
   75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   இராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
   நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
   எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
   ராஜா அண்ணாமலைபுரம்,
   சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்